# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### DINAMALAR DATED 24.04.2025

## முதல்வர் கோப்பை கபடி போட்டி: சமுதாய கல்லூரி முதலிடம்

புதுச்சேரி, ஏப். 24–

கல்லூரிகளுக்கு இடையே நடந்த கபடி போட்டியில் மாணவர் பிரிவில் சமுதாய கல்லூரியும், மாணவிகள் பிரிவில் பாரதிதாசன் கல்லூரியும் முதலிடம் பிடித்தன.

புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாய கல்லூரி, புதுச்சேரி கபடி சங்கம் மற்றும் அரசும் இணைந்து கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான இரண்டு நாட்கள் கபடி போட்டி, உப்பளம் ராஜிவ் காந்தி உள் விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் துவங்கியது.

இப்போட்டியில், ஆண்கள், பெண்கள் என 20 அணிகள் பங்கேற்றன.

இரண்டாம் நாளான நேற்று இறுதி போட்டிகள் நடந்தது. அதில், ஆண்கள் பிரிவில் சமுதாயக் கல்லூரி, தாகூர் அரசு கல்லூரி, மதகடிப்பட்டு காமராஜர் அரசு கல்லூரி முதல் மூன்று இடங்களை பிடித்தது.

அதேபோன்று பெண்கள் பிரிவில் பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, கோரிமேடு அன்னை தெரசா பட்ட மேற்படிப்பு மையம் மற்றும் சமுதாய கல்லூரி அணிகள் முதல் மூன்று இடங்களை பிடித்தன.

போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வரும் 29ம் தேதி நடைபெறும் விழாவில் பரிசு வழங்கப்படுகிறது.




ராஜிவ்காந்தி உள்விளையாட்டு அரங்கில் நடந்த முதல்வர் கோப்பை கபடி போட்டியில் தொழில்நுட்ப பல்கலைக்கழக அணியும், மதகடிப்பட்டு காமராஜர் கலை கல்லூரி அணியும் மோதின.

### DINAKARAN DATED 24.04.2025

புதுவை பல்கலைக்கழகத்தில்

## நவீன உளவியல் சவால்கள் கருத்தரங்கம்



புதுச்சேரி, ஏப். 24: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நவீன உளவியல் சவால்கள் மீது கவனம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. மனநலம் மீட்பு திறன், இளைஞர் வளர்ச்சி, நவீன உறவுமுறைகளின் இயக்கவியல் தொடர்பான அமர்வுகள் நடைபெற்றது. உளவியல் துறை தலைவர் பேராசிரியர் சிபநாத் தேப், தொழில்நுட்ப முன்னேற்றங்களால் உருவாகும் இயந்திர தன்மை, அதிருப்தி, மன அழுத்தம், உளவியல் துன்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

மக்கள் தொகை அதிகரிப்பு, உலகமயமாக்கல், பொருளாதார விடுதலை, சமத்துவக்குறைபாடுகள் போன்றவை வாழ்க்கை தரத்தில் நேர்மறை, எதிர்மறை தாக்கங்களை ஏற்படுத்தி வருவதையும், தொற்று நோய், மாசு, வன்முறை, போர், பொருளாதாரப் பின்னடைவு, சூழல், இயற்கை பேரழிவுகள், உணவுத் தட்டுப்பாடு போன்றவை பொது மக்களின் வாழ்வை கடுமையாக பாதிக்கின்றன என்றார்.

புதுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு, உளவியலாளர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணத்திலும் முக்கிய பங்காற்றுகிறார்கள். நரம்பியல் மருத்துவராக, தன்னுடைய மருத்துவ அனுபவங்களையும், மனநல மேலாண்மையில் இடம் பெறும் உளவியலின் பங்களிப்பும் பற்றி பகிர்ந்தார். இது மருத்துவ மற்றும் உளவியல் துறைகளின் இணைந்த பங்களிப்பை ஒளிவிடுகிறது என்றார். டி. கல்தாரா, தன்னுடைய அனுபவங்கள் மற்றும் செயல்முறைகளை மாணவர்களுடன் பகிர்ந்தார். தொழில்நுட்ப அமர்வுகளில் பேராசிரியர் ரங்கையா, பாதிப்புக்குப் பிறகு ஏற்படும் வளர்ச்சியையும், பேராசிரியர் பரணிகாந்த், மனித உறவுகள் மற்றும் அதன் தாக்கங்களையும், ரெஜாய்சன் பொதுவான உளவியல் பிரச்னைகள், அதன் தீர்வுகள் குறித்து உரையாற்றினர்.

MAALAI MALAR DATED 24.04.2025

புதுவை பல்கலைக்கழகத்தில்

# உளவியல் கருத்தரங்கு

புதுச்சேரி, ஏப்.24—

புதுவை பல்கலைக்கழகத்தில் நவீன உளவியல் சவால்கள் மீது கவனம் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.

மனநலம் மீட்பு திறன், இளைஞர் வளர்ச்சி, நவீன உறவுமுறைகளின் இயக்கவியல் தொடர்பான அமர்வுகள் நடந்தது. உளவியல் துறை பேராசிரியர் சிப்நாத்தேப், தொழில்நுட்ப முன்னேற்றங்களால் உருவாகும் இயந்திரதன்மை, அதிருப்தி, மன அழுத்தம், உளவியல் துன்பங்கள் குறித்து விளக்கினார். துணைவேந்தர் பிரகாஷ்பாபு உளவியலின் பங்களிப்பு குறித்து பேசினார். பேராசிரியர்கள் ரங்கையா, பரணிகாந்த், ரெஜாய்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

THILAI MALAI DATED 24.04.2025

860 860 5550 94432 55788
SRI ANNAMALAIYAR
ACTING DRIVERS
Good Driver
BEST SERVICE
D.K.Kumar
PUDUCHERRY

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
செய்திக்கு:94426 34795
மலர் : 4 இதழ் : 311
VOLUME: 4 ISSUE: 311
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (24-4-2025) வியாழக்கிழமை
PUDUCHERRY(24-4-2025) THURSDAY

புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜூவல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM
+914132339 999, 2333 916, 90475 78000

# தொழில்நுட்ப முன்னேற்றங்களாலும் மன அழுத்தம் பயன்பாட்டு உளவியல் துறை தலைவர் சிப்நாத் தேப் பேச்சு



புதுச்சேரி, ஏப்.24–

புதுவைப் பல்கலைக் கழகத்தின் பயன்பாட்டு உளவியல் துறை, "நவீன உலகில் உளவியலின் பன்முகப் பங்களிப்புகள்" என்ற தலைப்பில் ஒருநாள் பயிலரங்கை நடத்தியது.

இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம், உளவியலின் பல்வேறு அம்சங்கள் மற்றும் சிறப்புக்கூறுகள் பற்றிய விழிப்புணர்வை பல்கலைக் கழகத்தின் அனைத்து துறைகளுக்கும் ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், மாணவர்கள் மற்றும் மாணவிகள் மனநலத்துடனும் சமூக சவால்களுடனும் போராடும் சூழ்நிலையில், உளவியல் துறையை எளிதில் அணுகக்கூடிய நம்பிக்கையான சூழலை உருவாக்குவதாகும்.

இந்த நிகழ்வில் மனநலம் மீட்பு திறன், இளைஞர் வளர்ச்சி, நவீன உறவுமுறைகளின் இயக்கவியல் ஆகியன தொடர்பாக அமர்வுகள் நடைபெற்றன. இப்பயிலரங்கை புதுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு தொடங்கி வைத்தார்.

பயிலரங்கின் தொடக்க உரையில், பயன்பாட்டு உளவியல் துறை தலைவர் சிப்நாத் தேப் பேசுகையில்:

தொழில்நுட்ப முன்னேற்றங்களால் உருவாகும் இயந்திரதன்மை, அதிருப்தி, மன அழுத்தம், உளவியல் துன்பங்கள் போன்றவை ஏற்படுகிறது. மக்கள் தொகை அதிகரிப்பு, உலகமயமாக்கல், பொருளாதார விடுதலை மற்றும் சமத்துவக்குறைபாடுகள் போன்றவை வாழ்க்கை தரத்தில் நேர்மறை/எதிர்மறை தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது.

தொற்று நோய், மாசு, வன்முறை, போர், பொருளாதாரப் பிளவு, ஊழல், இயற்கை பேரழிவுகள், உணவுத் தட்டுப்பாடு போன்றவை, பொதுமக்களின் வாழ்வை கடுமையாக பாதிக்கின்றன. இந்த சூழ்நிலையில், உளவியலாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது. அவர்கள், கற்பித்தல், ஆலோசனை, மனநோய் பரிசோதனை, மனிதவள மேலாண்மை, திட்டமிடல், கொள்கை உருவாக்கம், சமூக மேம்பாடு, குடும்ப ஆலோசனை, குற்றவியல் விசாரணை உள்ளிட்ட பலவகையான துறைகளில் பங்களிக்கின்றனர் என்றார்.

இதில் மனிதவளப் புல முதன்மையர் சுல்தானா, பேராசிரியர்கள் ரங்கையா, பரணிகாந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.